உ

கணபதிதுணை

# கச்சிக் கலம்பகம்

ஆசிரியர், பூண்டி,
அரங்கநாத முதலியார்

பதிப்பாளர்,
S. பெருமாள்சாமி

தஞ்சைக்
கூட்டுறவுப் பதிப்பகத்தில்,
பதிப்பிக்கப்பெற்றது.

1947

விலை 0—

உ

கணபதி துணை.

# கச்சிக் கலம்பகம்.

காப்பு.

தங்கச் சிலையேடுந் தந்தவெழுத் தாணியுங்கொள்
தூங்கக் கரிமுகத்துத் தூயவனென்—சங்கையொழித்
தேடெழுத் தாணி யெடுத்தறியே னிந்நூலைப்
பாடவளிப் பானற் பதம்.

ஆசிரியவிருத்தம்.

தரையின்மிசைத் தமிழ்பெருகச் சைவநெறி தழைப்பவவ
　　தரித்த சால்பின்
மறையுறைவா மொருநால்வர் பதமலரைச் சிரங்கொண்டு
　　மடத்தைப் போக்கிக்
குறைவறுநாற் றோற்றத்தி னுளதாய துயரகலக்
　　குறிப்ப னன்னோர்
பிறைசுமந்த சடையாரென் பிழைசுமந்த கலம்பகத்தைப்
　　பெறச்செய் வாரே.

## நூற்றுவக்கம்

ஒருபோகு மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா தரவு.

பூமேவு நான்முகனும் புயங்கவணை மாதவனு
மாமேவு நினதுமுடி மலரடிகா ணாத்திறத்தை
ஆராயு மறிவினரே யம்பலக்கூத் தாட்டினையும்
வாரார்ந்த தனத்துமையாண் மகிழ்ந்துறையு மாட்டினையுங்
கழையிழைத்த வில்லானின் கண்ணினுறு கேட்டினையும்
பிழையிழைத்த முப்புரத்தார் பீடழிந்த பாட்டினையும்
அறமேய மால்விடையா யம்புதமா யம்பாகித்
திறமேய தேவியுமாய்ச் சேர்ந்தவருங் கூட்டினையுங்
கல்லடித்தார் சிலையடித்தார் கண்பறித்தார் முதலடியார்
தொல்லைநிலம் பிறவாமே துயரறுத்த பீட்டினையும்
பாற்கடலி னமுதெழுமுன் பகைத்தெழுந்த வாலத்திற்
கேற்கவிட மமைத்தமரர்க் கின்புறச்செ யூட்டினையுங்
கிழக்குவடக் கறியாத கீழ்மையருஞ் சிறப்பெய்தி
வழக்குமிடப் புரியுணர்வு வாய்ப்பளித்த நீட்டினையுங்

மறிபவரா மன்றியெம்போ லறிவற்ற சிறியவர்வீ
டுறுவகைமற் றில்லையென வுணர்ந்தெளிது காட்சிதரீஇ
மாகம்பத் தொடுமிறைஞ்சி வழிபாடு செயவுமையோ
டேகம்பத் தொருமாவி னினிதுவீற் றிருந்தருள்வோய்!

ஈரடித்தாழிசை—அ

இடங்கர்வாய்ப் பட்டகளிற் றின்னுயிரைப் புரந்தசெயல்
கடல்வீழ்த்த நாவரையன் கன்மிதத்தற் கொப்பாமோ

கைகைக்குக் கானடந்த காகுத்தன் பொறையினுநீ
வைகைக்கு மண்சுமந்த வண்மைமிகப் பெரிதன்றோ!

கம்பத்த னுயிர்மாயக் கடுஞ்சமர்செய் கைவலியென்
கம்பத்தன் சிலையெடுக்கத் தலைநெரித்த கால்வலிக்கே

கொம்பனையாள் கல்லுருவிட் டின்னுருவங் கொண்டதினுஞ்
சம்பந்த னென்பைப்பெண் ணாக்கியது சால்புடைத்தே

அம்பொன்றாற் புணரிநீர் சுவறச்செ யாற்றலினும்
நம்பொன்றாப் புரமூன்றை நகைத்தழித்தன் மேன்மையதே

எழுவிடையைத் தழுவிமண மெய்துமொரு செயலினுஞ்சீர்
மொழியரைய னமணகரி முனிவொழித்த தற்புதமே

அண்டரிள மடவாரை யணைந்தவபி ராமமென்னோ
பண்டிருடி மனைவியர்கள் பாடழிந்த வனப்பினுக்கே

பற்குனற்கு மாயன்சு பத்திரையைத் தந்தவகை
சற்குணற்குப் பரவைதரு தண்ணளிக்கு நேராமோ.

அராகம்—௪

உரையிட வரியதொ ரனலுரு வொளிதர
வரைமக ளிடமுறு வகைபுரி யளியினை
நிழலிடு தருவடி நிலைபெறு கருணையை
வழிபடு மவர்பெற வருள்பர வெளியினை
பகலவ னனலவ னிறைமதி பரிவுறு
தகவமை யுரைமிகு தமனிய வொளியினை
பழமறை யொலிகெழு பலதல மருள்பய
னழகுற வருளிவ ணமர்தரு களியினை

பெயர்த்தும்வந்த ஈரடித் தாழிசை அ.

நறைபூத்த மலர்க்கொன்றை நளினத்தின் மாண்டதுவே
பிறைபூத்த செஞ்சடையாய் பிறங்குபுய முற்றபினே

பணியணிந்தாய் மற்றதைவிற் பற்றியிசைத் தாய்கயிறாத்
திணியவைத்தாய் மந்தரத்தே நஞ்சுணவுஞ் சிறப்பாமோ
மாலுலகங் காக்கநர மடங்கலுருக் கொளவம்மா
லாலுலகுக் கானதுய ரகற்றவலார் வேறுளரோ
மகிழிருந்தாய் மனையென்றோ மாசுணமேற் றுயின்றானுக்
ககங்கனியச் சங்காழி யாண்டகைமுன் னருளியதே
கவுணியருக் கணிமுத்தங் காதலினீந் தருள்செயலக்
கவுணியருக் கணிமுத்தங் கனிந்திட்ட பரிசன்றோ
மதிக்கீற்று வேணியுற மலர்விழியு மதியான
விதிசாற்ற வறியேமுன் மேனியழ கியம்புவதே
முலைக்குறியும் வளைக்குறியுங் கொண்டதற்பின் முதலவனே
இலைக்குறியுங் குணமென்ன லெவ்வண்ண மியைந்திடுமே
மாவடிக்கீ ழுற்றாயுன் மலரடிக்கே மங்கலச்சொற்
பாவடுக்க நாவளிப்பாய் பழமறைசொல் பரமேட்டி.

நாற்சீரீரடி யம்போதரங்கம்-௨.

கரந்தயங் கனன்மழு வேந்தி நெற்றியிற்
புரந்தெறு சுடர்க்கணும் பூண்ட மேன்மையை
கூற்றினைக் குமைத்திடு கோலத் தாளினை
மாற்றினை யருணட மாடும் பான்மையை.

நாற்சீரோரடி யம்போதரங்கம்-௪.

ஈரேழ் புவனம் பரிந்து ணோற்றினை
காரூர் சடையிற் கரக்கு மாற்றினை
பாரார் பெரியோர் பணியுஞ் சாற்றினை
தேரார் தெளிவறு செருக்கை மாற்றினை.

முச்சீரோரடி யம்போதரங்கம்-௮.

புரமெரி படநகை கொண்டனை
புரிதவ மழிவகை கண்டனை
புரையறு தசைமிகை யுண்டனை
புணர்வுற வருமறை விண்டனை
மணிமிட றூர்தரு மிருளினை
மலைவளர் காதலி மருளினை
மறையொளிர் தோமறு பொருளினை
மகிழொடு மாவம ரருளினை.

### இருசீரோரடி யம்போதரங்கம்-கக.

சடையுறு செல்வினை அமுதுகு பாவினை
விடையுறு மெல்வினை அனலுறு கோவினை
கலையளை சொல்வினை சிலையில வாவினை
சிலைவளை வில்வினை தலைநதி மேவினை
மலைவலி புல்லினை மறைபடு நாவினை
வழிபெறு மல்லினை உலகுணு மேவினை
களமில கல்லினை கரிவளர் காவினை
பரவெளி யில்லினை கதிதரு மாவினை

### நேரிசையாசிரியச் சுரிதகம்.

எனவாங்

காரண வகில காரண பூரண
நாரண னறியா நாயக வேயக
முத்தே யறத்தின் வித்தே முக்கட்
சித்தே சத்தே யெத்தே வரும்பணி
அத்தா வன்று யளிக்கொரு வைப்பே
கத்தா வெனக்கூய்க் கண்ணீர் ததும்ப
உள்ளநெக் குருக வுரோமஞ் சிலிர்ப்ப
விள்ளற் கருநின் மேன்மையைப் புகழும்
பாவலர் தமக்குப் பழுவரு கூல
மேவலர் வேரற வீறிய சீல
மாதுமை பங்குறு மாண்புடைச் சீரிய
தீதெமை யணுகாத் திறமரு ளாரிய
நால்வ ரிசைத்தமிழ் நலனறி நாத
மால்வரை மங்கை மணாள நீத
கொன்றைத் தொடையணி கோனே பசுபதி
குன்றைக் குறைத்த கோதில் குணநிதி
கல்லாப் புல்லேன் கனிவறு மனத்தேன்
எல்லாப் பிழையு மியற்று மேழையாற்
சொல்லப் படுமோ சொலற்கரு நின்புகழ்
புல்லப் படுமோ புரையறு நின்பதம்
உன்னப் படுமோ வுத்தம நின்னெழில்
பன்னப் படுமோ பகவ நின்னருள்
பாடப் படுமோ பண்ணவ நின்சீர்
தேடப் படுமோ சேவடி யென்னினும்

அல்லார் நஞ்சரா வக்கு மத்தமும்
புல்லு மூவப்புடன் புனைந்தெனக் கனிந்து
சிற்றறி வினனுரை செய்யுளை
முற்று நயப்பாய் மூவர்க் கையனே. 1

நேரிசை வெண்பா.

ஐய முறுமனமே யண்ணறிருக் கச்சியரன்
செய்ய மலரடியைச் சிந்தித்தி—னையாமே
இன்மையறி யாவீகை யெச்சமறி யாவாய்மை
புன்மையறியாப் பொறையைப் பூண். 2

கட்டளைக் கலித்துறை.

பூண்ட வரவ மதியை யுணுது புரந்தருளு 3
மாண்ட வரவம் புரிவார் செயலே யழித்துவக்குந்
தாண்ட வரவ ரிணையடித் தாமரை தஞ்சமென
வேண்ட வரமளிப் பார்கச்சி யன்பர்க்கு மெய்யரணே.

புயவகுப்பு

இரட்டை ஆசிரியச் சந்தவிருத்தம்.

தனதனன தந்தனத் தனதனன தந்தனத்
தனதனன தந்தனத் தனதான தந்தன.

அரணெரிய வந்தரத் தமரர்துயர் சிந்தவெற்
பினையொருது ரும்பெனச் சிலைகோலி விஞ்சின
அரவமரி கந்துசெக் கரினிலகு செஞ்சடைப்
பனிமதிய ணம்புறப் புரியாம கிழ்ந்தன
அகிலபுவ னங்களுக் கமுதிடுகி ரந்தரிக்
கிடமமர்வ ரங்கொடுத் தகலாத ணைந்தன
அழலுருவ மன்றுபெற் றெருருபுரவ மைந்தனுக்
கொளிவடிவு தந்தருட் பொலிவானி மிர்ந்தன

காடமத கும்பமத் தகசுபட தந்தியைச்
சமர்பொருது வென்றுரித் ததளாடை கொண்டன
கடலமுதை யும்பருக் குதவவெழில் கந்தரத்
திலகுகறை கொண்டுதிக் கிருகால ளந்தன
களபமணி யம்பிகைக் கனகதன மின்புறத்
தழுவிவரு மங்கலச் சுவடால்வி ளங்கின
கதிர்மதிய மங்கிமுக் கணிஞெளித யங்கிடக்
கவேுடைய நிஞ்சினத் தாவாட மின்றன

சரமழைபொ ழிந்தபற் குனனருள்பொ ருந்திடப்
பகைவர்கெடு வன்படைக் கொடையாலு வந்தன
சமரபுரி கந்தனைப் புலவருய மண்டமர்த்
திறலவுணர் பங்கமுற் றிடுமாறு தந்தன
சததளம லர்ந்தபொற் றவிசினிலி ருந்தவச்
சதுமுகன்ம றங்கெடத் தலையோட ணிந்தன
சலமிசைது யின்றசக் கரதரன லம்பெறத்
தருமவிடை யம்புரப் பரிவோடி ணங்கின

இரவினவிர் திங்களிற் செலுமொளிபெ றுங்குழைக்
கவுரியிட மன்பினுற் றிடவாசை மிஞ்சின
இரணியனு ரந்தொலைத் தெழுநரம டங்கலைச்
சரபவுரு வந்தரித் தமராடி வென்றன
இடபமிசை வந்துபொற் பதநசைகொ ளன்பருக்
குயர்பதவி தந்திசைப் பருமோகை கொண்டன
இனிமைதரு கம்பமுற் றருளாக வெந்தைநித்
தியநிமல சுந்தரப் பரனார்பு யங்களே. 4

ஆசிரிய விருத்தம்.

புயங்கப் பணியார் புவியுண்ட புனித விடையார் புரையின்மதி
தயங்கப் பணியார் சடையாளர் தையின் சாலை தனைநிகர்வார்
இயங்கப் பணியார் புரமெரித்த வீசர் கச்சி யிடையமர்ந்தார்
மயங்கப் பணியா ரவர்திருத்தாள் வணங்கீ ரிடும்பை
[வற்றிடவே.
5

அம்மானை கலித்தாழிசை.

வற்றா வளக்காஞ்சி வாழ்ந்தருளே காம்பரனார்
செற்றார் புரமெரித்த தீயர்கா ணம்மானை
செற்றார் புரமெரித்த தீயரே யாமாயிற்
கற்றார்க ளங்கணராக் கழறுவதே னம்மானை
கழற லறுதொழில்சேர் காரணத்தா லம்மானை. 6

நேரிசை வெண்பா

அம்மானைக் கையமைத்தா னக்காளை யோடவைத்தான்
சும்மா விருந்துமதற் சுட்டெரித்தான்—பெம்மான்
பதிக்கச்சி மேய பரமன் பணிந்து
துதிக்கத் தருவன் சுகம். 7

### கட்டளைக்கலித்துறை.

சுகந்தரு கச்சிப் பதிவர் தடியர் துயர்களைவோர்
நகந்தரு மெல்லியற் காம விழியிரு காழிநெல்லா
லுகந்தரு முப்பத் திரண்டற மோமபச்செ யுத்தமர்பா
தகந்தரு துன்பொழிப் பார்பணி வீரவர் தாண்மலரே. 8

### ஆசிரியவிருத்தம்

மலர்க்கஞ்சன் சிரமிழந்தான் கோப்புரக்க மலையெடுத்தான்
வன்றி யானுன்
சிலைக்கரும்பா னுருவழிந்தான் சேணியங்கு மிருகதிருஞ்
சிதைந்து நொந்த
கலக்கரிய பகைப்புரங்க ணீறுபட்ட கச்சியே
கம்பர் மேன்மை
நிலைப்படவா யாமையினன் றேமனமே புகழ்ந்தடைதி
நிமல வாழ்வே. 9

### வலைச்சியார்
### இரட்டையாசிரியவிருத்தம்.

வாளைக் கயலை நிகர்த்தவெங்கண்
வலைச்சி யீர்நும வனப்பெவரான்
மதிக்க வமையு மரன்கச்சி
வந்தீ ரளவா மயறந்தீர்
தோளைத் தழுவிற் சுகம்பெறலா
மூட லொழிவீர் நீர்க்குமிழி
சுழிதேம் புளினந் தோன்றிடுமால்
துயர முறுவே னடைகிழங்கா
ளைக் கழியா திருலிதழி
னறவைப் பருக நச்சுறக்கொ
ணுனக் கருப்பஞ் சிலைவேளை
நாணச் செய்வேன் மலங்குறேன்
கோளைப் போக்கற் குறவைமட
வைப்பா மகத்தைக் குழைத்தென்மேற்
கொள்வீ ரிரதத் தென்காலான்
கொடிய பகழிக் குடையேனே 10

### கலிநிலைத்துறை.

ஏனங் கொன்றூ ரேனக் குருளைக ளிடர்தீர்த்தார்
மானக் கொன்றை வலன்வைத் துமைமா னிடம்வைத்தார்
தானங் குறைவார் தானத் துறையார் தமிழ்வல்லார்
கானத் துறவார் கம்பத் திடையே மகிழ்வாரே. 11

### ஆசிரியச்சந்தவிருத்தம்.

மகிழார மாவாரை மணமேவ விழைவாய்
மணியார மரவேயின் மலைபச்சை யுடையே
இகழ்மை மிசைபாடி நடமாடு மிடமா
மிகவாத தொழிலைய மில்வாழ்வொர் மலையின்
மகவாய வொருநீலி மறைவுற்ற சலத்தாள்
வரமைந்த னொருமாதின் வழிநின்ற திருடன்
தகவீது தெரிகாத லொழிவாயென் னுரைகேள்
தரைமீதெங் நலமெய்தி மகிழ்வாய்மின் னரசே 12

### விருத்தம். மடக்கு.

அரசுக விதையாரும் ... பரசுக விதையாரும்
அடையமை மானரும் ... புடையமை மானரும்
வரமா சடையாரு ... முரமா சடையாரும்
வயமா திரத்தாரும் ... புயமா திரத்தாரும்
கரமணி வடத்தாருஞ் ... சிரமணி வடத்தாரும்
களிமறைப் பரியாரு ...மொளிமறைப் பரியாரும்
அரிப்பதி யானருங் ... கிரிப்பதி யானரும்
அடியார் மாவாருங் ... கடியார் மாவாரே

### இரட்டையாசிரியவிருத்தம்

மாதுமையாள் பனிமலையில் வளர்ந்தாணின்
மதலையரிற் கயமு கத்தோன்
வரமுனிவன் வேண்டவட வரையேட்டிற்
பாரதப்போர் வரைந்தா னிபப்
போதலங்க லணிகுமரன் குன்றுதொறும்
பேருவகை பூப்ப மேவிப்
புனிதவிளை யாட்டயர்ந்தான் கச்சியமர்
புண்ணியனீ கயிலை மேரு
மாதிரத்தே வதிந்தனையென் கல்லனைய
மனத்தூடன் குடும்பத் தோடு
மருவவொரு தடையுமிலை மலைசிலையா
வளைத்தநினக் கெளிதே யென்றன்
கோதுடைய மனச்சிலையைக் குழைத்தன்பி
னெகிழவித்த னையை முன்னாட்
குருகுய்ய வுபதேசங் கூறியநீ
யெனக்குரைத்தாற் குறைமட்டாமே. 14

கட்டளைக்கலித்துறை.

மட்டிக்குட் டங்குங் கனுநிகர் கஞ்ச மலரனைய
தட்டிக்குட் டங்கை முருகனத் தாகச்சிச் சங்கரனே
பெட்டிக்குட் டம்பண மிட்டுவைப் பார்குணம் பெட்டுவினை
கட்டிக்குட் டன்றய ரெல்லா மகன்றிடக் கண்டருளே.

வெண்பா.

கண்டவனை மேவிக் கலந்துண்ட கள்வனெலி
கொண்டவனை நீர்க்கச்சிக் கோமானே—பண்டுனது
தானை மருவுந் தகைமையிலா னுற்றதெவன்
தோளை மருவுஞ் சுகம்.

தூது-கிளி.

ஆசிரியவிருத்தம்.

சுகமே மறைமா வடிமே வியவென்
றணைவற் கெளியேன் றுயரைப் பகர்வாய்
மகமே ருசிலைக் குனிவா னலனென்
மதனன் கழையே வையம் புகைக்குஞ்
சகமே முயின்றேன் பெயர்கொள் ளெளியேன்
சரணு கதிசேர் தலைவேண் டினனென்
றகமே குழையப் புரிவா யெனில்யா
னிழைதி தகலத் தருவாய் சுகமே.

கலிநிலைத்துறை.

நீதறு நாலுணர் தெள்ளிய சிந்தையர் மனமூடே
காதலின் வாழே காம்பரர் முடியைக் காணவய
னேத முறக்கோ வெகின மெனப்போய் முடிகாணு
வேதனை பெற்றோ வேதனை யுற்றாள் வெளியானுள்.

ஆசிரியவிருத்தம்.

வெளிவீட் டாரைக் காட்டாரை
வியன்மா வாரைச் சேவாரை
ஒளிவீட் டோங்குங் கச்சியரை
யுயர்மா மறையி னுச்சியரைக்
களியுற் ருடுங் கூத்தாரை
யகில மனைத்துங் காத்தாரை
அளியுற் றினிது புணர்ந்திடுதற்
கருங்கன் செயலொன் றிலைமானே. 19

### இரங்கல். ஆசிரியவிருத்தம்.

மாமையை யடைந்தாய் வானக முற்றாய்
மழைக்கணீ ருகுத்திடப் பெற்றாய்
காமுற வணஞ்சேர் வில்வளை விட்டாய்
கலைமதி யொளித்தலைப் பெட்டாய்
நாமுற விடிக்க மின்னிடை யானாய்
நள்ளிரு ளம்பரம் போனாய்
ஏமுறு மென்போற் கொண்டலே கச்சி
யீசனை விழைந்தனை சிறப்பே. 20

### மடக்கு. விருத்தம்.

சிறுகாலின் மணமளவுந் திருக்காஞ்சி யுள்ளீர்
சேயிழையாட் ககலுமிடைத் திருக்காஞ்சி யுள்ளீர்
மறியிலகு மழுவிடமார் மாசுணந்துன் புடையீர்
மங்கையணிந் திடுமுத்தம் மாசுணந்துன் புடையீர்
வெறிதாசை கூடன்மணத் துறவாலங் காட்டீர்
விதிவிழைவு கண்டவிடத் துறவாலங் காட்டீர்
அறிவேனுஞ் செயலிட்டீ ரம்பரங்கா வணமே
அளிப்பீரங் கொன்றைமல ரம்பரங்கா வணமே. 21

### ஆசிரியவிருத்தம்.

காரானைத் தோலுரித்த கறுப்பி னானைக்
களித்துடல நீரணிந்த வெண்மை யானை
வாரானை யூர்ந்திலங்கு செம்மை யானை
வலத்தானை யிடப்பாகப் பச்சை யானை
நீரானைச் செஞ்சடையி னெற்றி யுற்ற
நெருப்பானைப் பொருப்பானைச் சகத்தீ ரச்சேர்ப்
பேரானைப் பெரியானைக் கம்பத் தானைப்
பெம்மானை யெம்மானைப் பேசு மாறே. 22

### கலிவிருத்தம்.

மாறி யாடு மலரடி மாமறை
கூற வாடுங் குவலயத் தின்னறந்
தேற வாடுங் தெளிதமிழ்க் கச்சியின்
ஊற வாடு முளமகிழ் பொங்கவே. 23

### கைக்கிளை-மருட்பா.

பொங்கு மருணயனப் பூவி னிதழ்குவியு
மிங்கு மலர்க் கோதை யிதழ்வாடு—மங்குறவழ்
மாடக் கச்சியில் வாழுமெம் பெருமான்
குறையா வளக்கழுக் குன்றி
லுறைவா ளிவள்பூ வுதித்தது யவளே. 24

### மறம்-ஆசிரியவிருத்தம்.

தூதுவந்த தொழிலிலாத வாவமுக்கை யறிதியோ
தொல்லைநந்த மரபினோர்கொ டுந்தரக்கு வாரணம்
பூதலத்தி னிலையெனக்க லைவிழைத்த சிலையரே
பொன்றிணிந்த கொக்கைமான்ம கட்குறத்தி வள்ளிமுன்
போதகத்தை யேவியந்த மாதகத்தை யச்சுறப்
புரிந்தசெய்கை சாலுநுங்கு லம்புலப்ப டுத்திடச்
சூதவாழ்க்கை யார்துடிப்பி ஞகப்வைத்த வாண்மையார்
சொன்மறைக்க வாயதாக்கொ ரேற்புணர்ந்நி சைத்ததே. 25

### கட்டளைக்கலித்துறை.

இசையா ரணத்தின் முடியார் திருக்கச்சி யீசரன்பிற்
பசையா ரணங்கொரு பங்குடை யாரரி பங்கயத்தன்
மிசையா ரணங்கொழித் தோருள மேவிய மெய்யருத்தி
நசையா ரணங்குறு நானவர் நற்பத நாடுவதே. 26

### ஆசிரியவிருத்தம்.

நாடுந் தொண்டர் மகிழ்வெய்த நறுமா நீழ லமர்ந்தானைப்
பாடும் பணியே பணியாகப் படைத்தேன் பழைய
[வினை துடைத்தேன்
ஓடுந் துடியுங் கரத்தமைத்தோ ேனங்கா ரத்தி
[னுட்பொருளைத்
தேடுந் திறத்தோர்க் கறிவித்தோன் றேவி யுமையாள்
[காதலனே.

### ஒருபொருண்மேல் மூன்றடுக்கிவந்தஆசிரியத்தாழிசை.

காதங் கமழுங் கடியாரு மாந்தருக்கீழ்
நாத னருளாள னண்ணியசிர்ச் செவ்வி
காதிற் பண்ணுருங் கவியின்ப மானுமே

பூவின் மணமார் புனிதநறு மாந்தருக்கீழ்ச்
சேவின் மிசைத்திகழுந் தேசனமை செவ்வி
நாவின் னமுதூறு நற்சுவையை மானுமே.
மண்ணிற் சிறந்த வளமளிக்கு மாந்தருக்கீழ்
விண்ணிற் பொலிந்தான் விளங்கியுறு செவ்வி
கண்ணிணையாற் காண்பரிய காட்சியினை மானுமே. 28

வெளிவிருத்தம்.

மாக்கைக் குருகின் றழும்புற் றுரு மாவாரே
ஆக்கைக் கயனை யமைத்திட் டாரு மாவாரே
காக்கைக் கரியைக் கனிவித் தாரு மாவாரே
போக்கைக் கனலைப் பொலிவித் தாரு மாவாரே.

களி-கட்டளைக்கலிப்பா.

மாவி னிழல் வதிந்தருள் வார்கச்சி
வாழு மின்ப மகிழ்வாய்க் களியரேந்
தேவ ரன்று சிதைந்தவ ரேமது
வாவி சீதர னுண்ண மயங்குறின்
நாவ லர்ந்துமெய் பேசுவ ரின்னறை
யுண்ட நன்மையர் நற்பனை தெங்குசேர்
காவி டைப்பாடி யாடுவர் மண்டரு
கண்ணி றைந்த வமுதை யருந்தவே. 30

இதுவுமது. ஆசிரியவிருத்தம்.

அரவிந்த மலரின்கட் குடியனைய னமரர்சுரா பானத் தாரே
வாமுறுகா விரிநதிக்கட் குடியனே திருமருவு மார்பி னானுந்
தரணியின்கட் குடியர்முனந் தவமுனிவர் சித்தரும்விண்
[ணவர்க டாமுங்
காவடமேன் றிருக்கச்சிக் கண்ணுதலார் பனையின்கட்
குடியர் தாமே. 31

கட்டளைக்கலிப்பா.

கட்ட தும்புமி தழித்தெ ரியலைக்
கச்சி நாதர் தருவ திலையெனிற்
றுட்ட மன்மத னெங்கணை யாமணச்
சூத முல்லைய சோகம ரவிந்தங்
கெட்ட வுற்பல மஞ்சரி போல்வருங்
கிளிய னீர்மட நாணமச் சமபயிர்ப்
புட்ட யங்குயி ரைந்தும் வைக்கிரை
யோவென் றேதிரச் செம்மழு வாளர்க்கே, 28

### ஆசிரியவிருத்தம்.

மழுவேந்து வலக்கரத்தர் மழையேந்து சடைச்சிரத்தர்
[வான்புரத்தர்
விழவாங்கு பூதரத்தர் வேளெரித்த மாவுரத்த ராதரத்தர்
தொழவாழு மாதிரத்தர் நடமாடு மெரிசுரத்தர் தூவரத்தர்
குழையாடு செவியரத்தர் கச்சியுறை மாகத்தர் குணக்குன்
[றாரே. 33

### சிந்து - ஆசிரியவிருத்தம்

குன்றைவளைத் தருள்கச்சிக் கோமானார் சித்தவருக்
கொண்ட நாள்யா
மென்றைக்குஞ் சிறப்பெய்த விச்சையுடன்
கற்றவித்தை யிற்றென் றாமோ
மின்றைக்கு முடிவேந்தர் விரும்பவொரு
தினத்திரும்பு தனைப்பொன் செய்வேம்
இன்றைக்குப் பொன்னளித்து நாளைவெள்ளி
யியற்றினும்பின் சனிய தாமே. 34

### இதுவுமது

சனியாகு மூழ்வலியாற் சகலகலை யறியுணர்ச்சி
தகைபெ றாதால்
தனியாகு மெங்களுத வியைப்பெற்றுச் சாற்றும்ப
ரடைந்தார் பொன்னில்
கனியாரும் பொழிற்கச்சிக் கண்ணுதலார் கைச்சிலம்பைக்
கனக மாக்கிப்
பனியாருங் கடல்வண்ணன் மார்பினைப்பொன் னிருப்பாகப்
பண்ணி னேமே. 35

### கலிநிலைத்துறை.

இருப்புக்கு வெண்பொன் பசும்பொன் னாகக்கொண்ட
விறைவாவெனைக்
கருப்புக் குழன்றெய்க்க வையா தருள்கூர்ந்து
காப்பாய்கொலோ
பொருப்புக்கு வீழப் புலிக்காடை பொங்கப்
புரஞ்செற்றசெ
ருப்புக்கு வதனத் திடத்தந்த வொருமா
நிழற்சோதியே. 36

### நேரிசை வெண்பா

சோதிப் பரம்பொருள்வாழ் தூயவிடந் தொண்டர்நெஞ்சோ
வேதத் தனிமுடியோ வேள்விபுரி—மாதவர்வாழ்
தில்லையோ கம்பமோ சீர்க்கூட லோகயிலைத்
தொல்லைப் பனிச்சிலையோ சொல். 37

### இளவேனில் ஆசிரியச் சந்தவிருத்தம்.

பனிக்கால மாகப்ப லம்பூவி ரைக்கும்
பருவத்த ருட்கச்சி யிறையிங்கு வாரான்
குனிக்கோல நம்பன்ற ணிப்பென்ன சொல்வான்
குன்றத்தி ருந்தானை மன்றத்து வைத்தே
தனிப்பாக வென்னைப்ப சக்கிக்க லந்த
சமயத்து ரைச்சத்தி யங்கூறி யரவை
இனிப்பாரு மொழியாள னிதுசெய்த வழகோ
வென்றேயு டன்கேட்ப னினியென்ன குணமே. 38

### மடக்கு ஆசிரியவிருத்தம்.

குணதிசைவெய் யோற்கலரு மரவிந்தம் பானலமே
குலைந்திடுந்தென் பொதியில்வரு மரவிந்தம் பானலமே
கணமாய முத்துயிர்க்கு நந்தனந்தங் கயலாமே
கச்சியிறை தணத்தலின்வார் நந்தனத்தங் கயலாமே.
அணங்கேற மதன்முளரி முலையெய்திடு மாசுகமே
ஆசற்று ரிதழ்பருக முலையெய்திடு மாசுகமே
வணமணியின் பரஞ்சுமந்த வாழிதயங் கருங்கலமே
வஞ்சருக்கென் னெஞ்சரங்க வாழிதயங் கருங்கலமே 39

### பாண். நேரிசையாசிரியப்பா

கலன்பணி யுடைதோல் கலம்பலி யோடுகொண்
டிலந்தொறு மிரந்து ணிறைதரு மொற்ற
மலைவளர் காதலி மங்கள வல்லி
சிலைவேட் களித்த சிற்சுக மங்கலை
இழைவகிர் நுண்ணிடை யேந்திழை பங்கன்
பழைய கள்வன் பண்பினை யோர்ந்தேன்
பாணனே நின்னைப் பண்ணிசை கூட்டி
வீணையிற் பாடி விழைவை யூட்டித்
தன்வயப் படுத்தத் தந்திரங் கற்பித்
தென்வயிற் செலுத்து மிங்கித முணர்ந்தேன்

பாடினை யின்புறப் பாடினை யின்புறக்
கூடிய கொற்றவன் குணமறி வாயோ
மலைப்பெணங் தரியை மகிழ்வாய் மணந்து
மலைப்பெணைச் சடையி லமைத்த தேனுரை
கம்பை நதிக்கரைப் பனிவரைக் குமரி
யம்பிகை பூசனை யாற்றின னவனை
யுள்ளங் கலங்க வோங்குநீ ரழைத்துக்
கள்ளப் புணர்ச்சி கலந்து வடுப்பட்
டின்னமு மாறு தேய்ந்த தன்மை
யென்னவென் றுரைப்ப னிதுவலா தொருநாட்
டாரு வனஞ்செலீஇத் தாபதப் பன்னியர்
தெருமா லுற்றுப் பருவர லெய்தக்
கோவண நீத்துத் தீவணம் பூத்தம்
மின்னிடை யாருடன் விருப்புறப் பேசித்
துன்னிய தன்மை சொல்லுந் தகைத்தோ
வனிதையர் மயங்க வளைகொணர்ந் தன்று
மதுரையில் வந்த வசையே சாலுஞ்
சாலும் பாண சாலும் பாண
யாதுங் கேளேன் யானினி மயங்கேன்
போகென வுரைத்தும் போகா யந்தோ
அன்னை யறியா தணைந்தே னவனைப்
பின்னை யுற்றிடும் பீழை நினைத்திலன்
அகலுதி பாண வனையறி வாளேல்
தகரு நின்சிரந் தமரும் வெகுளுவர்
நெஞ்சி விட்ட நெருப்பின் வெப்பினை
வஞ்சக னறிய வழுத்துவை பாண
மறந்தே னன்னையை மன்னனைப் புணர்ந்து
சிறந்தன மென்றே திகைத்தே னித்துணை
பட்டது சாலும் பாணனே மடவார்க்
கிட்டது தானே யியலும் பரமனை
வெறுத்தலும் வீணே விழைவு
பொறுத்தலு மிலனினிப் புரிவ னற்றொண்டே.

ஆசிரியவிருத்தம்.

தொண்டர்க் குறவே யானுரைத் தூய மறைமா நிழலாரை
அண்டர்க் கிறையா மடலாரை யக்கு மெலும்பு மணிவாரைக்

கொண்டல் வண்ண னெண்கண்ணன் கூறற் கருஞ்சீர்
[கொண்டாரைத்
கண்டத் துறையு மாறுகடற் கடுவுண் டாரைத் துதிப்பாமே.

தூது-மேகம். நேரிசை வெண்பா.

கடுக்கைத் தொடைநயந்தேன் காதலுடை யார்யா
னடுக்கை யுறுமா நயந்தார்—கொடுக்கைக்குச்
செல்லே சிறந்தாய் திருக்கச்சி வாணர்பால்
வல்லே தொடையிரந்து வா. 42

கட்டளைக்கலித்துறை.

இரந்துயி ரோம்பிட வேழை மனக்கொதித் தின்னலுற
வுரந்தொலைந் தோயப் பலநோ யுடற்ற வுறுபசியால்
வருந்துபு மானமுந் தீரமு மங்கி மடிந்தொழிவீர்
திரந்தரு மேகம்ப வாணரை நீரென்கொல் சேர்கிலிரே. 43

தூது - நெஞ்சு. நேர்சைவெண்பா.

என்னெஞ் சினுமினியா ரில்லையென வெண்ணியதைத்
துன்னற் கருங்கச்சித் தூயவர்பா—லின்னலறப்
பூங்கொன்றைத் தாரிரக்கப் போதி யெனவிடுத்தேன்
தீங்கொன்றைச் சூழ்ந்திலா தேன். 44

கலிநிலைத்துறை.

ஒன்று சூழின்வே றொன்றுமுந் துறவுணர் வுலைந்து
பின்றை யெய்திடும் பெற்றியுய்த் துணர்கிலாப் பேயேன்
என்று நின்னரு ளிருங்கடல் குளிப்பதென் னரசே
மன்றி லாடிய குழகமா நீழல்வாழ் மணியே. 45

வஞ்சித்துறை.

மாநீழ னல்லார்
ஆனேறு தொல்லார்
தேனேறு சொல்லார்
வானேறு கல்லார். 46

ஆசிரிய விருத்தம்.

கல்லாலின் கீழிருந்து கலைவிரித்துப் புணர்வளித்த
கள்வ ணுர்க்குச்
சொல்லாலா யிரமுகமன் கூறுவையக் கச்சியர்க்குச்
சுகுண முண்டேல்

வில்லாடும் புயவிதழி விரும்புவையின் றேலின்றே
விழையப் பெற்றாள்
அல்லோடக் கண்டவிட மாயும்வகை யறிவளென
வறைதி மாதே 47

நேரிசைச்சிந்தியல் வெண்பா.

மாவுடையான் வெள்ளி மலையுடையா னெண்டிசையாந்
தூவுடையா னல்வேதச் சொல்லுடையான்—தாவிலறச்
சேவுடையா னெங்கள்குலத் தே. 48

ஊசல் ஆசிரியவிருத்தம்.

தேவார முதலியவைந் துறுப்பும் வாழச்
சிறந்தமறை யாகமங்க ளெழித்து வாழத்
தாவாத சித்தாந்த சைவம் வாழச்
சந்தவரைச் செந்தமிழ்நூல் தழைத்து வாழ
நாவாரும் புகழ்க்கச்சி நகரிற் காம
நயனியொடு முறையிறைசீர் நன்கு பாடிப்
பூவாரு மலர்விழியீ ராடி ரூசல்
புத்தமுத நிகர்மொழியீ ராடி ரூசல். 49

மதங்கி. ஆசிரியவிருத்தம்.

ஆடரவ மரைக்கசைத்த வமலர்திருக் கச்சிமறு காடி மைந்த
ரூடுருவு பிணைவிழியோ டிணைவாளு மோச்சிவரு மொரும [தங்கீர்
நாடவரு மிவைக்கிலக்கம் யாதோநும் மொழியமுத நல்லீர் [விண்ணோர்
பாடமையப் பயவாரி கடைந்துகரம் வருந்தியதென் பண்டு [தானே. 50

இடைச்சியார். ஆசிரியவிருத்தம்.

பண்டுமலை கொண்டுபயோ தரத்திகலை வென்றிடுமைம்
படையா னுக்கு
மண்டுபயோ தரகிரியைக் காணிக்கை யிட்டீரால்
வள்ளல் கச்சிக்
கண்டயங்கு மிடைச்சியீ ராடைநீக் காதுருசி
காண்மி னென்பீர்
கொண்டவளை யுருக்காமே கொளவிணங்கீர் ததியெண்ணீர்
நயமோர் விற்றே. 51

தூது-வண்டு வெண்பா.

ஓர்காற் செலினறுகா லுற்றனையென் பார்வளமை
ஆர்காஞ்சி மேய வமலர்திரு—மார்பாருந்
தாராய கொன்றை தரச்சேறி வண்டேயான்
பேராத வின்பம் பெற. 52

ஆசிரியவிருத்தம்.

பெரியானைப் பேரின்ப நிறைவீட் டானைப்
பிறைமதியம் பிறங்குசடா தரனை யார்க்கு
மரியானை யடலவுணர் புரநீ ருக்க
வழலூற்று நகையானை யரனை வேழ
வுரியானைத் திருக்கச்சி யுடையான் றன்னை
யுன்னரிய குணநிதியை யொப்பில் வேதப்
பரியானை யகநிறுவித் துதிப்பா ரன்றே
பவத்துவக்கைப் பாற்றுறுமா டவர்களாவார். 53

வெறிவிலக்கு. ஆசிரியவிருத்தம்.

ஆடவரும் பெண்மைவிரும் பபிராமர்க் கணங்குற்ற வறிவி லேனைச்
சாடவருஞ் சிறுகாலுந் தழன்மதியுஞ் சாகரத்தி னொலியு நெஞ்சம
வாடவரு மலர்க்கணையு மறிவிய விரிந்திடுமோ வனசத் தானுந்
தேடவரு மேகம்பர் தாமத்தைக் கொணர்வீரேற் றேறு வேனே. 54

கட்டளைக்கலித்துறை.

தேரு மனத்தைத் திருப்பித் தெளிவுறச் செய்துபின்ன
ராருத மும்மை மலப்பிணி நீங்கநல் லாற்றினுய்ப்பர்
மாரு வளக்கச்சி மாநிழ லாரு வணன் றனக்குப்
பாரு வரவ மணிந்தவர் பேரருள் பாடுதுமே. 55

கட்டளைக் கலிப்பா.

பாடு பட்டும் பயன் றரு கச்சிவாழ்
பண்ண வன்னடிப் பத்தியில் பாவிகாள்
கூடு விட்டுயிர் போம்பொழு தொன்றையுங்
கொண்டு போதலி லாமையை யுன்னிலீர்

வீடு கட்டுவிர் வெள்ளிபொன் னீட்டுவீர்
வேண்டு நன்மணி யாடையும் பூணுவீர்
ஏடு கட்டிய பாறயி ருண்ணுவி
ரெப்ப டிப்பெறு வீர்பொற்ப தத்தையே. 56

கட்டளைக்கலித்துறை.

பதஞ்சேர்த்துப் பாடியென் பாசத்தொடர்பட்டுப் பாவையரிங்
கிதஞ்சேர்த்துக் கொஞ்ச மயங்கி யிடர்ப்பட் டிரங்குவனங்
கதஞ்சேர்த் தரைக்கசைத் தாய்கச்சி வாண கடையனெந்த
விதஞ்சேர்த னின்பதஞ் சாயனை யாய்கதி வேறிலையே. 57

கலிவிருத்தம்.

அனைத்திடமு மொளிமருவ வமைந்தவொரு விழியே
மனத்துயரை மாய்க்கவருண் மலர்ந்தவொரு விழியே
சினத்துலகைச் சிதைக்கவழல் சிறந்தவொரு விழியே
நினைத்துலகந் தொழுகச்சி நின்மலர்மூ விழியே. 58

ஆசிரியவிருத்தம்.

விழியால் விழியுறு பிறழ்வால் விதங்கர் நுதலா னுதலுறு
சுலையான்மென்
மொழியான் மொழியுறு சுவையான் முழுநல முலையான்
முலையுறு பொலிவாற்பல்
வழியாற் கணிகைய ருறவால் வலிகெட வயர்வே
னினிமருண் மருவாமே
ஒழியா நலனுற வொருமா நிழலுடை யொளியார்
சடையவ ருள்வாரே (59)

சந்தவிருத்தம்.

சடைகரந்த வரவமிந்து பகைமைமாறு தகைமையார்
தாயையொத்த வன்பினர் தனையிறந்த வின்பினர்
மடைதிறந்த கடலையொத்த மருளகற்று மருளினர்
மகிழ்சிறந்த முதல்வர்தங்க மலைகுழைத்தெனெனைமதன்
படைவருத்த நெஞ்சிருப்பு வஞ்சரேன் குழைத்திலர்
பகவொணாத பண்பமர்ந்த மாமரின்னு மருகுரு
றிடைமறந்த தென்கொலோவெ னிளமைநன் னலம்பெறற்
கின்பளித்த கச்சிமேவு மிணையிலாத போதரே. 60

### கட்டளைக்கலித்துறை.

போதவித் தேபுக லேயற யோர்க்குநம் புந்தகையார்
தீதவித் தேற்குநற் செவ்விய னேபுலத் தெவ்வடர
வேதவித் தேமிக வேசறு வேற்கு விரைந்தருணீங்
காதவித் தேன்சுர ருண்கச்சி வாழன்பர்க் கண்ணியனே

### நேரிசைவெண்பா.

அண்ணியரா ரறவோர்க் கத்த ரலரிதழிக்
கண்ணியர்பூங் கச்சிநகர்க் கத்தரடி—மண்ணியமுத்
தந்தம்பற் பந்தாந் தனந்தங் கனவிடையார்
தொந்தங்கொ ளென்றன் றுணை. 62

### ஆசிரிய விருத்தம்.

துன்னிமித்தங் கண்டுமெஞ்சா தொருதுணையுந் துணையாது
துனைந்து சென்று
பொன்னிமித்தஞ் சிலைசமர்ந்து முறுவலித்துப் புரமெரித்த
புரைதீ ரெந்தாய்
என்னிமித்த மென்னகத்தே குடிபுகுந்தாய் திருக்கச்சி
யிறைவா வேழை
தன்னிமித்தந் திருவுள்ளங் கனிந்ததன்றித் தகுதிமற்றென்
றருக்கி னேற்கே. 63

### ஆசிரியவிருத்தம்.

தருக்குறு தெரிவையர் செருக்கிலே
தனையிடு மவர்மொழி யுருக்கிலே
மருக்கம ழளகச் சொருக்கிலே
மனமிவ ரிளமுலை நெருக்கிலே
பெருக்குறு விழைமவர் தருக்கினேன்
பிசிதரு மிருக்கிற் பிறங்குவெள்
ளெருக்கணி கச்சிப் பதியினு
ரிரங்குறு மாறென் புகல்வனே. 64

### மடக்கு. ஆசிரியவிருத்தம்

கற்றரு மாதின் பங்குடையார்
கச்சியரெனதின் பங்குடையார்
சிற்றிளை யுள்ளுறை வாயல்வா
தென்வளி காதுறை வாயலவா

சுற்றுமு டைந்து வருந்திடரே
தோற்றமி டைந்து வருந்திடரே
பெற்றிடு முத்தம ருங்கழையே
பேசரி யாரை மருங்கழையே. 65

பனிக்காலம். ஆசிரியச்சந்தவிருத்தம்.

அழைக்காம லணுகா ரலர்கூர மாய்வே
னையோவெ னையர்க்கு ரைப்பாரு மில்லை
கழைக்காம னெய்யுஞ்ச ரந்தைக்க நொந்தேன்
கண்ணுள ரிந்தப்ப னிக்கால மோரார்
குழைத்தார் பொழிற்கச்சி வாழண்ண லாரைக்
கும்பிட்ட ழைப்பீர்கு ழைப்பீர்ம னத்தைப்
பிழைத்தேன லேனென்று பிச்சர்க்கி யம்பீர்
பெண்பேதை யுய்யுந்தி றம்பாங்கி மாரே 66

மடக்கு. ஆசிரியவிருத்தம்.

மாதளையிற் றருநறும்பூ விரைவிடுக்குங் காலம்
மதன்சினந்து மங்கையரை விரைவிடுக்குங் காலம்
காதமணங் கமழ்சோலை பண்புணருங் காலம்
கணவரிளங் கோதையர்தம் பண்புணருங் காலம்
சிதமுறு கழைக்கரும்பின் கண்டழைக்குங் காலம்
சிற்றிடையார் தந்தலைவர்க் கண்டழைக்குங் காலம்
கோதறுசங் கினம்பழனப் பங்கமுறுங் காலம்
குலவுகச்சி யாரபிரியப் பங்கமுறுங் காலம். 67

வஞ்சிவிருத்தம்.

உறசிர்க் கச்சி யுத்தமயான்
துறவுங் கொள்ளேன் றாய்மையிலேன்
அறமும் புரியே னமைவில்லேன்
பெறவுந் தருமோ பேரின்பே. 68

இன்னிசை வெண்பா.

இன்படைய வேண்டி னிகலற்க - வன்பிறவித்
துன்பொழிய வேண்டினவந் துன்னற்க - அன்புறவாம்
போதனருள் வேண்டுமெனிற் பொய்யற்க - சூதகலச்
சூதநிழ லாண்கழலைச் சூழ். 69

### நேரிசை வெண்பா.

சூழும் தளையாய தொல்லைப் பிறவியினைப்
போழு நவியமாம் புத்தேளிர்—தாழுநலம்
பொன்றா வளக்கச்சிப் பூக்கொன்றைக் கண்ணியர்தம்
இன்றாட் கிடும்பச் சிலை. 70

### கலிநிலைத்துறை.

பச்சைசி றப்பைந் தொடிவல மேவிய பசுபதியுள்
நச்சின ரொன்றினு மெச்சமு றாதரு ணனிகூர்வான்
கச்சியு றைந்தருள் கண்ணுதன் மறலிக் கண்டகனால்
அச்சமு றாதடி யவர்முன மந்தத் தணுகுவனே. 71

### மடக்கு. ஆசிரியவிருத்தம்.

அணங்காறு தலையுள்ளா ரழக ரென்மா
னணங்காறு தலையுள்ளா ரானா ரந்தோ
வணங்கூடு தலனலைப்பற் றுற்று மன்னாள்
வணங்கூடு தவனலைப்பற் றறுத்த லோரார்
கணம்புரத்தைச் சாம்பருவந் திழைத்தார் கன்னற்
கணம் புரத்தைச் சாம்பருவங் குலைப்ப தன்னார்
பணமொளிக்கும் பணிதரித்தார் கச்சி யீசர்
பணமொளிக்கும் பணிபரித்தார் பான்மை யுற்றே.

### கட்டளைக்கலிப்பா.

உற்றுப் பார்க்கிலுன் வாழ்க்கையென் னையமே
யூரும் வெட்ட வெளியுடை தோலுனைப்
பெற்றுப் பார்க்கு ளுறுஞ்சுக மில்லையாற்
பேதை நின்னையென் பெற்றிடப் பற்றினள்
கற்றுத் தேர்ந்த பெரியவர் வாழ்திருக்
கச்சி மாநகர்க் கத்தவென் னத்தனே
பற்றி லாருளல் பற்றுறு பங்கயப்
பாத னேபடப் பாம்பணி காதனே. 73

### ஆசிரியவிருத்தம்.

படவரவ மரைக்கசைத்த பரமர் வாழும்
பதிக்கச்சி மேயவிளம் பாவை கொங்கை
தடவரையே கரிக்கொம்பே சகோர மேமாந்
தளிர்மேனி தமனியத்தி னொளியே கண்கள்

விடவடிவே யாசுகமே வேலே சேலே
மென்மருங்குன் முயற்கோடே விழைந்தே
[னெஞ்சஞ்
சுடவகைதேர் புருவமதன் சிலையே துண்டஞ்
சுடர்க்குடையே சுந்தரிகந் தருவ மானே. 74

தவம். கட்டளைக்கலித்துறை,

மான்கொண்ட கண்ணியர் மையலற் றேதவ வன்மைமரீஇ
யூன்கொண்ட துன்பை யொழிக்கத் தலைப்படு முத்தமர்காள்
வான்கொண்ட வுச்சி வரைமுழை யுற்று மயாவதெவன்
கான்கொண்ட கொன்றையர் கச்சியை யெய்திற் கலியறுமே.

இரங்கல். ஆசிரியச்சந்தவிருத்தம்.

எய்தவம்பு தைக்குமுன்ன மற்றொர்பகழி தொட்டுவே
ளேழையங்க சைந்துதேய வப்புமாரி பொழிகிறான்
செய்தவம்பு ரிந்திலாதெ னுய்யுமாறு முண்டுகொல்
திகழுமாட மதியுரிஞ்சு கச்சிமேய செம்மலார்
கைதவங்க ணங்கியான்மன் மதனைவென்ற காதையென்
காதனோக்கி யின்பளிக்க நேர்வரல்ல ரேலனை
வைதவம்பு ரோக்கியேனு மனமுவக்க வந்திலர்
மாதர்நோவ வெய்துசெல்வ மென்னவர்க்கு மங்கையே

நேரிசை வெண்பா.

என்ன பிழை செய்தாலு மேழையே னுக்கிரங்கு
மன்னுபுகழ்க் கச்சியுறை வள்ளலான்— தன்னுமயன்
கம்மாள னீசன் கடையன் பொதுவ னென்பேன்
கைம்மாறென் செய்வனோ காண். 77

சம்பிரதம், ஆசிரிய விருத்தம்.

காற்றைப் பிடித்தொர்சிறு கரகத்துண் மூடுவெங்
கனலைவா னெக்க விடுவேம்
சேற்றைப் பிசைந்துசில தேவரையு மாக்குவேஞ்
சிதரனை மாலாக்குவேம்
ஆற்றைச் செலுத்தியரி யேறவைப் பேமமுதை
யாவலுடன் வாரியுண்பேம்
சீற்றைப் புனைந்தவர் திருக்கச்சி போன்றதல
சேர்தருஞ் சத்தி யெம்மதே 78

### கட்டளைக் கலிப்பா.

சட்டப் பட்டவு ளம்பெற்ற சால்பினோர்
தங்கப் பெற்றகச் சிப்பதிச் செல்வவேள்
குட்டப் பட்ட தலைவிதி யென்றலை
கொடுமை கூறெழுத் திட்டனன் மாதர்வார்
கட்டப் பட்டத னம்பிறை வாணுதல்
கடுவ டங்கிய கண்ணின்ம யங்குவேற்
கிட்டப் பட்டமட் டின்பமும் வாய்க்குமோ
வீச னேயரு ணேசவி லாசனே. 79

### ஆசிரியவிருத்தம்.

அருணைப் பதியி னழலுருக்கொண்
டமைந்த கச்சி யங்கணர்முன்
பெருமைப் புரத்தை யழிவெப்பும்
பிழைத்த மதற்கொல் விழிவெப்பும்
கருமைப் பகடூர் காலனைக்காய்
வெப்புந் தணியப் பழவடியார்
அருமைத் தமிழின் னமுதூறு
மழையைச் சொரிந்தார் தெரிந்தாரே. 80

### கொச்சகக் கலிப்பா.

மழைகொண்ட வுச்சியினர் வளங்கொண்ட கச்சியினா
உழைகொண்ட காத்தொழிலு முமைகொண்ட விடத்தெழி
கழைகொண்ட மதனழியுங் கனல்கொண்ட நுதல்விழியும்[லுங்
இழைகொண்ட வுரத்தழகு மெமக்கினிய வமுதாமே. 81

### கொற்றியார். ஆசிரியவிருத்தம்.

ஆமைமீன் கோலமுறு மங்கமரீஇ யாவிடையா
லகடு மேவி
மாமையுரு வோடுவளை சக்கரமேந் தித்திகழும்
வகையாற் குல்லைத்
தாமனையொப் பீரைந்து சாஞ்செய்துயர் நீக்கியரு
டந்து காப்பீர்
சோமனவா ழிடத்தர்கச்சி மறுகுலவு துளவமணக்
கொற்றி யாரே. 82

### கொச்சகக் கலிப்பா.

மணக்கோலஞ் செய்ய மதனன் முடுகின்றான்
கணக்கோலங் கொங்கைக் கிடவர்தீர் கட்செவிமால்
குணக்கோலன் கச்சிக் குழகன் றிருவுலா
வணக்கோலங் காண வருவீர் மனமகிழ்ந்தே. 83

### கட்டளைக் கலித்துறை.

மதுவிருந் தேயளி பாடுந் தொடைபுனை மன்னருமிங்
கெதுவிருந் தேனும் பெறுமின்ப மென்கச்சி யீசனைவாண்
புதுவிருந் தேபுண்ட ரீகன் முராரி புரந்தரனைப்
பொதுவிருந் தேவல் கொளும்பெரு மானைப் போற்றுவனே

### இதுவுமது.

போற்றப்பல் பாவுண்டு கேட்கச் செவியுண்டு பூப்பறித்துத்
தூற்றக் கரமுண்டு தாழச் சிரமுண்டு தோத்திரங்க
ளாற்றச்செந் நாவுண்டு தென்கச்சி வாணருண் டல்லலெலா
மாற்ற வருளுண்டு நெஞ்சே துயரெவன் மற்றெனக்கே 85

### கொச்சகக் கலிப்பா.

எனக்கே தனதருளை யென்னுமிய லென்றுயர
முனக்கே தெரியுமகக் குற்ற துயரமெலா
மனைக்கே தெரியுமக வறியுங்கொ லன்னைசெயல்
கனக்கேதந் தீர்த்தருள்பூங் கச்சிநகர்க் கண்ணுதலே. 86

### கட்டளைக் கலித்துறை.

கணங்கொண்ட பாசத் தொடாறுத் துய்யுங் கருத்துடையீர்
மணங்கொண்ட தண்டலை சூழுந் திருக்கச்சி மாநகர்வாழ்
நிணங்கொண்ட சூற்படை நின்மலன் றாளை நிதந்தொழுவீர்
பணங்கொண்ட பாம்பின் விடங்கொண்ட கண்ணியர்
[பற்றஞ்சியே, 87

### மடக்கு. கட்டளைக் கலிப்பா.

பரவை யாலம் பருகிய வண்ணல்விண்
பரவை யாலம் பயின்றொரு நால்வர்தந்
தெரிவை யங்கடி செய்யர்ப ரவையார்
தெரிவை யங்கடி யர்க்கருள் செம்மலார்
சிரமர் தாகினிச் செஞ்சடை யார்தொண்டர்
சிரமர தாக்கு திருக்கச்சி நாதர்தீ
வரவ மாலை யழித்தெனைக் காப்பரால்
அரவ மாலை யணிந்தருள் கத்தரே. 88

### தழை, ஆசிரிய விருத்தம்

கத்தனார் மகிழ்ந்த கச்சிவெற் புடையாய்
காமனா மயங்குறு கவினார்
அத்தநீ யளித்த மார்தழை யரிவைக்
காருயி ரளித்தகா ரணத்தாற்
சத்தனா மநுமன் சானகிக் களித்த
துணையமை யாழியோ வித்ர
சித்தனான் மடிந்த கவிக்குலம் பிழைப்பச்
செய்தசஞ் சீவியோ தானே. 89

### கலிநிலைத்துறை.

தானே தன்னை நிகர்த்திடு காஞ்சித் தலமுடையான்
தேனே யமுதே கனியின் சுவையே தீந்தமிழே
கோனே யென்போர் குறைதீர்த் தென்றுங் குலைவில்லா
வானே தருவான் மாவெய் தியதென் மாதவமே. 90

### பிச்சியார். ஆசிரியவிருத்தம்.

என்னதவஞ் செய்தேனோ வுமைக்கம்பர் திருக்கச்சி
யிடையே காணத்
துன்னவரு முடனீறுங் கல்லாடை யொடுசெங்கைச்
சூல முஞ்செம்

பொன்னனையா திருமேனிப் பொலிவுமே யெனைமயக்கப்
புரியுங் கண்டீர்
அன்னநடைக் கன்னன்மொழிப் பிச்சியீ ரணிமுறுவ
லதிக மன்றே. 91

ஆசிரியவிருத்தம்

அதிக மன்றெளி யேந்துயர் புரிந்திடு மறக்கடை யாயுங்காற்
றுதிகொ ளேகம்ப வாணனார் தூயவ ரிதயவா லயத்தூடு
குதிகொ ளின்புரு வாயவர் மாதொரு கூறுடைக் கோமானார்
நதிகொள் வேணியர் நாடுவோர் தமக்கமை நலத்தினைத்
[தெரிந்தாரே. 92

ஊர். நேரிசைவெண்பா.

தெரிந்தார் மலர்த்தடத்தின் றெண்ணீர் தலைக்கோல்
பரந்தாழுங் கச்சிப் பதியே—கரந்தாழ்வெண்
மாதங்கத் தானத்தன் வாரிசத்த னேடரிய
மாதங்கத் தானத்தன் வாழ்வு. 93

ஒரொலிவெண்டுறை.

வாழ்வளிக்குந் திருவிழியார் மறையளிக்கு மருமொழியார்
[வணங்கி னோர்தந்
தாழ்வகற்று மலர்ப்பதத்தார் தளர்வகற்று மைம்பதத்தார்
[தண்ணார் திங்கட்
போழ்வதியும் புரிசடையார் புகழ்க்கச்சி மேய
ஆழ்கருணை மாகடலை யடிபணிமின் கண்டீர். 94

இரட்டை ஆசிரியவிருத்தம்.

காத்தின் வளையுஞ் சுழிவளையுங்
கனிந்த மொழியார் புனைவளையுங்
கலையு மணியு மேகலையுங்
கல்வி பயின்ற கலையறிவும்

புரத்தின் வனப்பு நூபுரமும்
புரைதீ ரகத்தின் வற்புரமும்
பொலன்றோ டணையும் பூவணையும்
புரியும் பணியும் பொற்பணியும்
வாத்தி னுதித்தா ளொழித்தாளம்
மடமா னுடல மொழித்தாலும்
வளமா வடியீ ருணைமச்சாரு
மருவப் பெற்றா ளாதலினற்
சிரத்தி னலைமான் வைத்தீர்நுஞ்
செந்தா மரைத்தாட் கீழேனுஞ்
சேருந் திறத்தை யறிவாளே
சிறியாண் மதனை வென்றிடவே. 95

## இரங்கல். மடக்கு.

### எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

மதனைவென்றவர் நஞ்சமார்ந்தவர் வலியர்முண்டக முன்னியே
மகிழ்நர்வந்திலர் மாலைதந்திலர் துயர்வதுண்டக முன்னியே
கதமிகுந்தெழு மத்திநீர்த்துறைப் பெடைபிரிந்தில கம்புளே
கவலைகூரவு ளுற்றிமேவுறு நறைசொரிந்தில கம்புளே
மதியினெற்றரு முத்தமேயவர் தருவதென்றொரு முத்தமே
மணியுயிர்த்திரை சங்கமேயிர வொன்றுபற்பல சங்கமே
நிதிதருந்தவ வங்கமேயினி யடைவதுந்தவ் வங்கமே
நெடியனுந்தொழு கம்பமேயுறை நிமலர்தீர்ப்பர்கொல் கம்பமே.

## மருட்பா.

கம்பத் திருந்துதவுங் கண்மணியைச் சிந்தித்து
நம்பத் திருந்துவீர் நானிலத்தீர் - வெம்பும்
பிணியு மூப்பும் பீடழி பழியுந்
தணியா வறுமைத் தாழ்வுந் தீரும்
திருவரு ணமக்குச் சிவனைத்
தருவ னன்றோன் சற்குரு வாயே. 97

இரங்கல். இரட்டையாசிரியவிருத்தம்,

குருகு நெகிழுந் திறாவில்வாய்
கழிசேர் குருகே குருகழியக்
கொங்கை நிதலை பூப்பவுளங்
குலைந்தே யுடைய வுடைசோரப்
பருகும் பாலு மருந்தணமும்
பகைக்கு மருந்தென் றறையனமே
பழுவ மனைய குழல்பூவைத்
தரியா மையைச்சொல் பூவையே
அருகு பயின்ற கிளியேயென்
கிளியால் வந்த தத்தனையு
மளந்த படியே யளந்தாலு
மதுவே சாலு மளியினமே
முருகு விரிபூம் பொழிற்கச்சி
மூவா முதல்வ ரளியினமேன்
முறையோ வளியேற் களியாமை
கேளி ரிதனைக் கேளிரே. 98

இரட்டை ஆசிரியவிருத்தம்.

கேளோ டுற்ற கிளையொறுப்பீர்
கேத முறுவீர் கெடுமதியாற்
கிளிவாய் வரைவின் மகளிர்பாற்
கிட்டி மயங்கித் தியங்குவீர்
வாளா கழிப்பீர் வாழ்நாளை
வசையே பெறுவீர் வல்வினையீர்
வளமாத் தருவா யுலகுய்ய
வந்த கருணை மார்கலியைத்
தோளா மணியைப் பசும்பொன்னைத்
தூண்டா விளக்கைத் தொழுவார்தந்
துயரக் கடற்கோர் பெரும்புணையைத்
துருவக் கிடையா ரவநிதியை

வேளா டலைமுன் றீர்த்தானை
வேழ வுரியைப் போர்த்தானை
வெள்ளம் பாய்ந்த சடையானை
வேண்டிப் புரிமின் றொண்டினையே. 99

ஆசிரியவிருத்தம்.

தொண்டர் சிரத்தின் முடிக்கும்பூ
தொழுவா ரிதய மடிக்கும்பூ
அண்டர் முடியிற் றுலங்கும்பூ
அருமா மறையி னிலங்கும்பூ
பண்டை வினைப்பற் றழிக்கும்பூ
பணிவா ரல்ல லொழிக்கும்பூ
தெண்டண் டடமார் கச்சியில்வாழ்
திருவே கம்பர் பதப்பூவே. 100

## கச்சிக்கலம்பகம்

முற்றுப்பெற்றது.

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சை. T.E. 44c 6872-200

கச்சிக் கலம்பகம் ரூ. 0—8—0

பாரதசார வெண்பா ரூ. 1—0—0

இது, ஆதிபர்வம் தொடங்கிச் சௌத்திக பர்வம் ஈருக (தருமர் பட்டாபிசேகம் வரை) 750 வெண்பாக்களில் அதியற்புதமாகச் செய்யப்பட்டது.

கிடைக்குமிடம் :

கரந்தைத் தமிழ்ச்சங்கம்,

கருந்தட்டாங்குடி P. O.

தஞ்சாவூர்.